**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு. சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜாஜி | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**17.10.2023 OS No. 7/2023 வா.சா.1** ராஜாஜி **ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை :**

1. எனக்கு நன்றாக எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். இந்த வழக்கின் பிராதிற்கு விபரம் சொன்னது யார் என்றால் என் தகப்பனார் சொன்னார். நிருபண வாக்குமூலத்திற்கு யார் விபரம் சொன்னது என்றால் என் தகப்பனார் ராமு தேவர் சொன்னார். என் தகப்பனார் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் 2008-ல் இறந்துவிட்டார். தேதி ஞாபகமில்லை. 1 வது லக்க சொத்திற்கு கொக்கலாஞ்செடி புஞ்சை என பெயர் என்றால் சரிதான். 2-ம் லக்க சொத்தை அம்மன் கோவில் அருகில் உள்ள நாத்தாங்கால் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். 2ம் லக்க சொத்திற்கு பட்டப்பெயர் அத்தியடி குண்டு என்றால் சரியல்ல. 1ம் லக்க சொத்து எஸ்எல்ஆர் காலத்தில் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் என் பெரியப்பா ஆதிமூலத்தேவர் பெயரில் மூத்தவர் என்பதால் இருந்தது.

2) 2ம்லக்க சொத்து எஸ்எல்ஆர் காலத்தில் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் என் பெரியப்பா ஆதிமூலத்தேவர் பெயரில் மூத்தவர் என்பதால் இருந்தது. மேற்படி சொத்துக்களை என் தகப்பனார் ராமுத்தேவரும், என் பெரியப்பா ஆதிமூலத்தேவரும் எழுத்துமூலமாகவோ, வாய்மொழியாகவோ பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் 30.7.1967-ல் பாகம் பிரித்துக்கொண்டார்கள். அதை எழுதிவைத்துள்ளார்கள். என் பெரியப்பா ஆதிமூலத்தேவரின் மனைவி பெயர் என்ன என்றால் பொன்னம்மாள் ஆகும். அவருக்கு பட்டப்பெயர் சமுந்தராயி ஆகும். பொன்னம்மாள் (எ) இருளாயிக்கும், ஆதிமூலத்தேவருக்கும் பிறந்த குழந்தைதான் பிச்சைமுத்து என்றால் சரிதான். பிச்சைமுத்துவை பிரதிவாதியின் தந்தை கருப்பையாவிற்கு திருமணம் செய்துகொடுத்தார்கள் என்றால் சரிதான்.

3. பிச்சைமுத்து, கருப்பையாவின் மகள்தான் பிரதிவாதி செல்வி என்றால் சரியல்ல. பிரதிவாதி போலீஸ் (எ) ஆதிமூலத்தேவரின் பேத்தி ஆவார். ஆதிமூலத்திற்கு எந்த வாரிசும் இல்லை என்றால் கழுங்காயி என்ற ஒரு குழந்தை பிறந்து இறந்துவிட்டது. அந்த குழந்தை எப்போது இறந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. தாவா வழக்கின் நிருபணவாக்கு மூலத்திலோ, பிராதிலோ எந்த இடத்திலாவது என் பெரியப்பா ஆதிமூலத்தேவரின் வாரிசு செல்வி இல்லை என்று சொல்லியுள்ளேனா என்றால் இது சம்மந்தமாக வழக்கு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஆதிமூலத்தேவரின் வாரிசு செல்வி இல்லை என்று மானாமதுரை உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.32/1999என வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த

வழக்கில் செல்வி ஆதிமூலத்தேவரின் வாரிசு என்று தீர்ப்பானது என்றால் அதற்கு நாங்கள் மேல்முறையீடு செய்துள்ளோம்.

4. சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் ஏஎஸ்.64/2002 என வழக்கு நடந்தது என்றால் சரிதான். அந்த மேல்முறையீட்டு வழக்கிலும் 24.2.2005-ம் தேதியில் ஆதிமூலத்தேவரின் வாரிசு செல்விதான் என்று தீர்ப்பானது என்றால் சரிதான். அதற்கு உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளோம். உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மேல்முறையீட்டின் வழக்கு எண் தெரியுமா என்றால் வழக்கு எண் ஞாபகமில்லை. SA(MD) No.27/2006 and SA(MD) No.918/2006 என்று இரண்டாம் மேல்முறையீட்டு வழக்கு உள்ளது என்றால் சரிதான். மேற்படி இரண்டாம் மேல்முறையீட்டில் மாண்புமிகு.மதுரை உயர்நீதிமன்றம் கடந்த 4.4.2014-ல் எனது மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டாவை ஆராய்ந்து பார்க்காமல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

5. மேற்படி செல்வியிடம் சர்வே எண்.250/1-ஐ கிரையம் பெற்றவருக்கும் எனக்கும் மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் மு.வ.எண்.13/2013 நடந்தது என்றால் சரிதான். அந்த தீர்ப்பு கிரையம் பெற்றவருக்கு சாதகமாக வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பில் எனது பெரியப்பா ஆதிமூலத்தேவரின் வாரிசுதான் செல்வி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பை எதிர்த்து சிவகங்கை சார்பு நீதிமன்றத்தில் ஏ.எஸ்.7/2016 என வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு மானாமதுரை சார்பு நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பின்படி மாற்றப்பட்டு ஏ.எஸ்.எண். 138/2019 ஆக நிலுவையில் இருந்தது என்றால் சரிதான்.

6. மேல்முறையீட்டு வழக்கிலும் மாண்புமிகு. சார்பு நீதிமன்றம் எனது மேல்முறையீட்டை தள்ளுபடி செய்து 18.11.2022-ம் தேதி தீர்ப்பளித்தது என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் நீதிமன்றம் ஆவணங்களை சரியாக கவனிக்கவில்லை. என் பெரியப்பா ஆதிமூலத்தேவர் பெயரில் இருந்து என் அப்பா பெயருக்கு எப்போது பட்டா மாறியது என்றால் 1967-ல் பாகம் பிரித்த பிறகு 1197-ம் நம்பர் பட்டாவில் என் அப்பா பெயருக்கு ஏற்பட்டது. வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாபாஸ் புத்தகத்தில் 1ம் லக்க சொத்தான புல எண்.278/5 என் அப்பா கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாபாஸ் புத்தகத்தில் பரப்பளவை ஏர்ஸ்-ல் குறிக்கப்பட்டுள்ளதா அல்லது செண்ட்-ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஏர்ஸ்-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

7. 1-ம் லக்க சொத்திற்கு ஏர்ஸ் என்ன என்றால் ஏர்ஸ் தெரியவில்லை 97 செண்ட் ஆகும். வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாபாஸ் புத்தகத்தில் உள்ள 2ம்லக்க சொத்தான 401/3 ஆதியில் யார் பெயரில் இருந்தது என்றால் என் பெரியப்பா ஆதிமூலம் பெயரில் இருந்தது. வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாபாஸ் புத்தகத்தில் 3வது லக்க சொத்தான புல எண்.261/2 சம்பாசெய் எஸ்எல் ஆர் காலத்தில் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் அது எனக்கு சரியாக தெரியவில்லை. வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாபாஸ் புத்தகத்தில் 4வது லக்க சொத்தான புல எண். 367/14 எஸ்எல் ஆர் காலத்தில் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் என் பெரியப்பா ஆதிமூலம் பெயரில் இருந்தது.

8. வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாபாஸ் புத்தகத்தில் 5,6,7,8 வது லக்க சொத்துக்களான புல எண். 386/4, புல எண்.386/6, புல எண்.429/2, புல எண்.209/2 எஸ்எல் ஆர் காலத்தில் யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் என் பெரியப்பா ஆதிமூலம் பெயரில் இருந்தது. யுடிஆர் காலத்தில் சர்வே எண்.386/4, புல எண்.386/6 யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் என் அப்பா பெயரில் இருந்தது. கீழராங்கியம் கிராமத்தில் வடுகன் மகன் ராமுத்தேவர் மகன் ஆதிமூலத்தேவர் உள்ளார் என்றால் அப்படி ஒருவர் இருந்து இறந்துவிட்டார். ராமுத்தேவர் மகன் ஆதிமூலத்தேவர் பெயரில் புல எண். 386/4, புல எண்.386/6 ஆகியவை யுடி ஆர் பட்டா எண்.208-ல் இருந்தது என்றால் அது வேறு சொத்து, இது வேறு சொத்தாகும்.

9. வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாபாஸ் புத்தகத்தில் ஒவ்வொரு சொத்திற்கும் அருகில் ஊதா நிற பேனாவில் குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் அதை அதிகாரிகள்தான் எழுதிக்கொடுத்தார்கள். ஊதா நிற பேனாவில் குறிப்புக்கள் எழுதப்பட்டுள்ளதன் அருகில் எழுதிக்கொடுத்த அதிகாரிகள் யாரும் கையொப்பம் இடவில்லை என்றால் கையொப்பம் இட்டு முத்திரைவைத்துள்ளார்கள். என் பூர்விக சொத்துக்களை என் அப்பா வாதியாக இருந்து மானாமதுரை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் இந்த பிரதிவாதி செல்வி மீது தாக்கல் செய்த மு.வ.எண்.32/1999 வழக்கில் வா.சா.ஆ.5 ஆக 1974-ம் தேதியிட்ட பாகவஸ்தி என் தகப்பனாரால் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் என் அப்பா அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை.

10. ஒரு சர்வே எண்ணிற்கு ஒரு பட்டா தான் இருக்கும் என்றால் ஒரு பட்டாவில் பல புல எண்கள் இருக்கும். வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாபாஸ் புத்தகத்தில் பட்டா எண்.1191 மற்றும் பட்டா எண்.522 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணமான பட்டாபாஸ் புத்தகத்தில் மொத்த 8 லக்க சொத்தில் எந்த சொத்துக்கள் பட்டா எண்.1191 மற்றும் எந்த சொத்துக்கள் பட்டா எண்.522க்குரியவை என்று சொல்லமுடியுமா என்றால் தனியாக சொல்லமுடியாது.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.